# பரீட்சகரின் அறிக்கை

## AA2 பரீட்சை – 2018 சனவரி

## (AA26) வியாபார முகாமையும் தந்திரோபாயமும்

இவ்வினாப்பத்திரம் A, B, C, D எனும் 4 பகுதிகளில் 10 கட்டாய வினாக்களைக் கொண்டிருக்கிறது.

### பகுதி A

நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

**வினா இல. 01**

வினா இல. 1 ஆனது பத்து (10) கட்டாய வினாக்களை உள்ளடக்கியிருந்தது. ஒவ்வொரு வினாவுக்கும் 2 புள்ளிகள் வீதம் மொத்தமாக 20 புள்ளிகள் இவ்வினாவுக்குரியதாகும்.

இங்கு, இல. 1.1 தொடக்கம் 1.5 வரையான வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்து அவ்விடை குறித்துநிற்கும் இலக்கத்தை விடைப்புத்தகத்தில் எழுதுமாறு கோரப்பட்டிருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் தரப்பட்ட அறிவுறுத்தல்களைப் பின்பற்றவில்லை என்பதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. சில பரீட்சார்த்திகள் வினாப்பத்திரத்திலேயே விடைகளை குறித்திருந்ததுடன் அதனை வினாப்பத்திரத்துடன் இணைத்திருந்ததையும் காணக்கூடியதாக இருந்தது. இதற்கு மேலதிகமாக, சில பரீட்சார்த்திகள் இந்தப் பகுதியிலிருந்த சில வினாக்களுக்கு விடையளித்திருக்கவில்லை.

பெரும்பாலான பரீட்சார்த்திகள் உப வினாக்கள் 1.2 மற்றும் 1.5 இற்கு சரியாக விடையளித்திருக்கவில்லை. வினா இல. 1.2 ஆனது முறைமைக் கோட்பாட்டின் கூறுகள் தொடர்பானதாகக் காணப்பட்டது. இதற்கான சரியான விடைத் தெரிவு “4” ஆக இருந்தபோதிலும் அதிகமானவர்கள் சரியான விடையினைத் தெரிவுசெய்திருக்கவில்லை.

வினா இல. 1.5 ஆனது கலாசார வலை தொடர்பான வினாவாக இருந்தது. இங்கு தரப்பட்ட தெரிவுகளில் தொடர்பற்ற கூறினை அடையாளம் காண எதிர்பார்க்கப்பட்டது. எவ்வாறாயினும், அதிகமானவர்கள் கலாசார வலையின் கூறாக அமையாததைத் தெரிவுசெய்வதற்குப் பதிலாக கலாசார வலையின் கூறு ஒன்றினைத் தெரிவுசெய்திருந்தனர்.

இல. 1.6 தொடக்கம் 1.10 வரையான வினாக்களில் தரப்பட்ட கூற்றுக்கள் ஒவ்வொன்றும் சரியானதா அல்லது தவறானதா என்பதைக் குறிப்பிடுமாறு கேட்கப்பட்டிருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவற்றுக்கு நன்றாக விடையளித்திருந்ததுடன் உயர் புள்ளிகளையும் பெற்றிருந்தனர். எவ்வாறாயினும், சில பரீட்சார்த்திகள் வினாக்கள் தொடர்பில் போதிய அறிவைக் கொண்டிருக்காமை அல்லது பரீட்சைக்குச் சரியானவாறு தயார்படுத்தாமையால் குறைந்தளவு புள்ளிகளையே பெற்றிருந்தனர்.

பாடத்திட்டம் முழுமையையும் உள்ளடக்கியிருந்த இந்த வகை வினாக்களுக்கு விடையளிக்கும் போது பரீட்சார்த்திகள் தமது நேரத்தினைச் சரியாகத் திட்டமிட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது.

“நோக்கச் சோதனை வினாக்களுக்கு” விடையளிக்கும்போது பரீட்சார்த்திகள் தமது நேரத்தை விளைதிறன்மிக்க வகையில் பயன்படுத்தவும் தரப்பட்ட அறிவுறுத்தல்களைச் சரியாக விளங்கிக் கொள்ளவும் வேண்டும்.

## பகுதி B

இந்தப் பகுதி ஒவ்வொரு வினாவுக்கும் 5 புள்ளிகள் வீதம் மொத்தமாக 25 புள்ளிகளுக்காக ஐந்து வினாக்களைக் கொண்டிருந்தது.

### வினா இல. 02

முகாமைத்துவத்தின் முக்கியத்துவம் தொடர்பான பரீட்சார்த்திகளின் அறிவைப் பரீட்சிக்க இங்கு எதிர்பார்க்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு நன்றாக விடையளித்திருந் தமையை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. எவ்வாறாயினும், சில பரீட்சார்த்திகள் முகாமைத்து வத்தின் முக்கியத்துவத்தை விபரிப்பதற்குப் பதிலாக முகாமைத்துவம் என்ற பதம் மற்றும் முகாமைத்துவச் செயன்முறை ஆகியன பற்றி விபரித்திருந்தனர். எனவே வினாவைச் சரியாக வாசித்து விளங்கிக்கொள்வது அவசியமானதாகும்.

### வினா இல. 03

இங்கு அதிகாரவியலின் ஐந்து பண்பியல்புகளைக் குறிப்பிடுமாறு கேட்கப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்குச் சரியாக விடையளித்து முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர். அவர்கள் சுய கற்றல் புத்தகத்தினைப் படித்திருப்பதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. எவ்வாறாயினும், சில பரீட்சார்த்திகள் கேட்கப்பட்ட விடயம் பற்றிய அறிவின்மை மற்றும் குறைந்தளவான புரிந்துணர்வு காரணமாக குறைந்தளவு புள்ளிகளையே பெற்றிருந்தனர். ஆயினும், சில பரீட்சார்த்திகள் அதிகாரவியலின் அனுகூலங்களையும் பிரதிகூலங்களையும் விடையாக வழங்கியிருந்தனர். இன்னும் சிலர் தேவையற்ற விதத்தில் நீளமான விடைகளை வழங்கியிருந்தனர்.

விடையளிக்கும்போது வினாவில் கேட்கப்பட்டவை மீதும் வினாவுக்காக ஒதுக்கப்பட்ட புள்ளிகள் மீதும் கவனத்தைச் செலுத்துவது முக்கியமானதாகும்.

### வினா இல. 04

பயனுறுதிமிக்க தொடர்பாடலைப் பேணுவதற்கு நிறுவனம் ஒன்றின் முகாமையாளர் ஒருவருக்குத் தேவைப்படும் மூன்று தொடர்பாடல் திறன்களைக் குறிப்பிடுமாறு கேட்கப்பட்டிருந்தது. சில பரீட்சார்த்திகள் வினாவைச் சரியாக விளங்கிக்கொள்ளாமல் முகாமைத்துவத் திறன்களைக் குறிப்பிட்டிருந்தனர். எவ்வாறாயினும், மிகச் சொற்பளவிலானோர் தெளிவான, சரியான விடைகளை வழங்கியிருந்தனர்.

சில பரீட்சார்த்திகள் தொடர்பாடல் என்னும் பதத்தினை விபரித்திருந்ததுடன் தொடர்பாடலின் வழிமுறைகளை அடையாளங் கண்டிருந்தனர். பரீட்சார்த்திகளிடம் இவ்வகை வினாக்களுக்கு தெளிவானதும் சரியானதுமான விடைகள் எதிர்பார்க்கப்படுகின்றன என்பதைக் கவனத்திற் கொள்ளுதல் வேண்டும். வினாவில் நேரடியான மற்றும் துல்லியமான விடைகள் எதிர்பார்க்கப்படும் போது தேவையற்ற விவரிப்புகளையோ விபரங்களையோ எழுத வேண்டாம்.

**வினா இல. 05**

இங்கு தந்திரோபாயக் கட்டுப்பாடு மற்றும் செயற்பாட்டுக் கட்டுப்பாடு ஆகியவற்றிற்கிடையிலான ஐந்து வேறுபாடுகளைக் குறிப்பிடுமாறு கேட்கப்பட்டது.

பரீட்சார்த்திகள் தந்திரோபாயக் கட்டுப்பாடு மற்றும் செயற்பாட்டுக் கட்டுப்பாடு ஆகியவற்றிற்கிடை யிலான வேறுபாடுகளைத் தெளிவாக அடையாளம் கண்டுகொள்ளவில்லை என்பது அவர்களால் வழங்கப்பட்ட விடைகளிலிருந்து தெரியவருகிறது. அத்துடன், சில பரீட்சார்த்திகள் தந்திரோபாயக் கட்டுப்பாட்டிற்கும் செயற்பாட்டுக் கட்டுப்பாட்டிற்குமிடையிலான வேறுபாடுகளை அடையாளம் காண்பதற்குப் பதிலாக அவ்விரண்டு பதங்களையும் தனித்தனியாக விபரித்திருந்ததையும் காணக்கூடியதாக இருந்தது. எனவே, பெரும்பாலான பரீட்சார்த்திகள் பாடப்புத்தகத்தைப் படிக்காததன் காரணமாக புள்ளிகளைப் பெற்றிருக்கவில்லை.

**வினா இல. 06**

நிறுவனம் ஒன்றிற்கு தலைமைத்துவம் ஏன் அவசியம் என்பதற்கான ஐந்து காரணங்களைக் குறிப்பிடுமாறு இங்கு வினவப்பட்டது. தலைமைத்துவம் பற்றிய அடிப்படை அறிவைப் பரீட்சார்த்திகள் கொண்டிருந்தபோதிலும் இவ்வினாவுக்குச் சரியான விடையினை அவர்களால் அளிக்க முடியவில்லை. சிலர் ஒரே விடயத்தை திரும்பத் திரும்ப விடைகளில் குறிப்பிட்டிருந்தனர். எவ்வாறாயினும், சில பரீட்சார்த்திகள் நிறுவனம் ஒன்றிற்கு தலைமைத்துவம் ஏன் அவசியம் என்பதற்கான காரணங்களை விபரிப்பதற்குப் பதிலாக தலைமைத்துவக் கோட்பாடுகளை ஆராய்ந்திருந்தனர்.

## பகுதி C

**வினா இல. 07**

இவ்வினா புத்திசாதுரியமான தீர்மானமெடுத்தல் செயன்முறை தொடர்பான இரண்டு பகுதிகளைக் கொண்டிருந்தது. இவ்வினாவில் பகுதி (a) இல், புத்திசாதுரியமான தீர்மானமெடுத்தலின் நான்கு தடைகளை அடையாளம் காணுமாறும் பகுதி (b) இல், புத்திசாதுரியமான தீர்மானமெடுத்தல் செயன்முறையுடன் தொடர்புடைய படிமுறைகளை விபரிக்குமாறும் கேட்கப்பட்டிருந்தது. பகுதி (a) மற்றும் பகுதி (b) இற்கு முறையே நான்கு புள்ளிகளும் ஆறு புள்ளிகளும் ஒதுக்கப்பட்டிருந்தன.

பரீட்சார்த்திகள் பகுதி (a) இற்கு வெற்றிகரமாக விடையளித்திருந்தமை அவதானிக்கப்பட்டது. பரீட்சார்த்திகள் தரப்பட்ட வினாவின் இப்பகுதிக்கு விடையளிக்கும்போது அவர்களது பொது அறிவை வெளிப்படுத்தியிருந்தால் பரீட்சார்த்திகளால் முழுப் புள்ளிகளையும் பெறக்கூடியதாக இருந்திருக்கும். சில பரீட்சார்த்திகள் புத்திசாதுரியமான தீர்மானமெடுத்தலின் தடைகளை இனங்காண்பதற்குப் பதிலாக புத்திசாதுரியமான தீர்மானமெடுத்தல் செயன்முறையின் தன்மையினையும் புத்திசாதுரியமான தீர்மானமெடுத்தலை எவ்வாறு மேற்கொள்ளலாம் என்பதையும் குறிப்பிட்டிருந்தனர். இவை சம்பந்தமற்ற விடைகளாகும். அத்துடன் சில பரீட்சார்த்திகள் சரியானவாறு தரப்பட்ட வினாவை விளங்கிக்கொள்ளாது ஒரே விடயத்தை மீண்டும் மீண்டும் குறிப்பிட்டிருந்தனர்.

பரீட்சார்த்திகள் பகுதி (b) இற்கு வெற்றிகரமான விடைகளை வழங்கியதன் மூலம் உயர் புள்ளிகளைப் பெற்றிருந்தனர். அதிகளவான பரீட்சார்த்திகள் வினாவில் கேட்கப்பட்டதை சரியாக விளங்கிக்கொள்ளவில்லை. சில பரீட்சார்த்திகள் புத்திசாதுரியமான தீர்மானமெடுத்தல் செயன்முறையின் படிமுறைகளை விபரிக்காது அதனை வெறுமனே குறிப்பிட்டிருந்தனர். அத்துடன், சில பரீட்சார்த்திகள் புத்திசாதுரியமான தீர்மானமெடுத்தல் செயன்முறையுடன் தொடர்புடைய படிமுறைகளின் தொடர்தன்மையின்றி பிழையான ஒழுங்குமுறையில் அவற்றைக் குறிப்பிட்டிருந்தனர்.

**வினா இல. 08**

இவ்வினா ஊக்கப்படுத்தல் தொடர்பான இரண்டு பகுதிகளை உள்ளடக்கியிருந்தது. இவ்வினாவின் பகுதி (a) இல் நிறுவனம் ஒன்றின் செயலாற்றுகைக்கும் ஊழியர் ஊக்கப்படுத்தலுக்குமிடையேயான தொடர்பினை ஆராயுமாறும் பகுதி (b) இல் மாஸ்லோவின் தேவைப் படிநிலைக் கோட்பாட்டின் கீழ் காட்டப்பட்டுள்ள தேவைகள் மூன்றினை விபரிக்குமாறும் கோரப்பட்டது. பகுதி (a) இற்கும் பகுதி (b) இற்கும் முறையே நான்கு மற்றும் ஆறு புள்ளிகள் ஒதுக்கப்பட்டிருந்தன.

பரீட்சார்த்திகள் பகுதி (a) இற்கு வெற்றிகரமாக விடையளித்திருந்ததை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. சில பரீட்சார்த்திகள் முக்கிய விடயங்களைக் குறிப்பிடாவிட்டாலும்கூட அவர்கள் இரண்டு கோட்பாடுகளுக்குமிடையிலான சாதகமான தொடர்புடைமையைச் சரியாக அடையாளம் கண்டிருந்தனர். ஒரு சில பரீட்சார்த்திகள் இரண்டு கோட்பாடுகளுக்குமிடையிலான சரியான தொடர்புடைமையை அடையாளம் கண்டுகொள்ளவில்லை. அத்துடன், சில பரீட்சார்த்திகள் நிறுவனமொன்றினுள் ஊழியர்களை ஊக்கப்படுத்தும் முறைகளை ஆராய்ந்திருந்தனர். இது சம்பந்தமில்லாத விடையாகும்.

பரீட்சார்த்திகள் வெற்றிகரமான விடைகளை வழங்கியதன் மூலம் பகுதி (b) இற்கான முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர். இது பரீட்சார்த்திகள் மாஸ்லோவின் தேவைப் படிநிலைக் கோட்பாட்டைச் சரியாகக் கற்றிருக்கின்றனர் என்பதைக் காட்டுகிறது. பரீட்சார்த்திகள் விடையினை வெற்றிகரமான முறையில் வளப்படுத்தும் பொருட்டு வரைபடங்களையும் உதாரணங்களையும் பயன்படுத்தியிருந்தனர். இவ்வினாவின் இந்தப் பகுதிக்கான ஒட்டுமொத்த செயலாற்றுகை திருப்திகரமாக இருந்தது.

**வினா இல. 09**

இங்கு, பகுதி (a) இன் கீழ், நிறுவனச் சமூகப் பொறுப்புடைமையின் மூன்று மட்டங்களை விபரிக்குமாறும் பகுதி (b) இல் நிறுவனமொன்றில் கலாசாரத்தின் முக்கியத்துவத்திற்கான காரணங்கள் நான்கினை எழுதுமாறும் கோரப்பட்டிருந்தது. பகுதி (a) இற்கும் பகுதி (b) இற்கும் முறையே ஆறு மற்றும் நான்கு புள்ளிகள் ஒதுக்கப்பட்டிருந்தன.

சில பரீட்சார்த்திகள் CSR இன் மூன்று மட்டங்களை விபரிப்பதற்குப் பதிலாக CSR என்னும் பதத்தினை மாத்திரம் விபரித்திருந்தமை அவதானிக்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவைச் சரியாக விளங்கிக்கொள்ளவில்லை. இவ்வினாவுக்கான ஒட்டுமொத்த செயலாற்றுகை சராசரி மட்டத்தில் காணப்பட்டது. சிறியளவிலான பரீட்சார்த்திகள் மாத்திரமே வெற்றிகரமாக விடையளித்து முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

சில பரீட்சார்த்திகள் நிறுவனமொன்றில் கலாசாரத்தின் முக்கியத்துவத்திற்கான காரணங்களை விபரித்திருந்தனர்.

## <u>பகுதி D</u>

**வினா இல. 10**

**<u>பகுதி (a)</u>**

இங்கு **சுபுல் தளபாடக் கம்பனி** எதிர்நோக்கும் சவால்கள் மூன்றினை விபரிக்குமாறு கோரப்பட்டது. தரப்பட்ட விவரணத்தை விளங்கிக்கொண்டிருப்பின் பரீட்சார்த்திகளால் இந்த வினாவுக்கு விடை அளித்திருக்க முடியும். பெரும்பாலான பரீட்சார்த்திகள் சவால்களைச் சரியாக இனங்கண்டு அவற்றை விபரித்திருந்ததன் மூலம் வெற்றிகரமாக விடையளித்திருந்தனர். சில பரீட்சார்த்திகள் எவ்வித விபரிப்புமின்றி வெறுமனே சவால்களை மாத்திரம் குறிப்பிட்டிருந்தனர். இவ்வினாவுக்கு 6 புள்ளிகள் ஒதுக்கப்பட்டிருந்தபோதிலும் சில பரீட்சார்த்திகள் இப்பகுதிக்கு நீளமான விடைகளை வழங்கியிருந்தனர். அத்துடன், இன்னும் சில பரீட்சார்த்திகள் தரப்பட்ட விவரணத்தில் இல்லாத சவால்களையும் குறிப்பிட்டிருந்தனர்.

சில பரீட்சார்த்திகள் தரப்பட்ட விவரணத்தைப் பிரயோகிக்காது வேலைச்சட்டகத்தை மாத்திரம் விபரித்திருந்தனர். விடைகளை பொருள் விளங்குமாறு கூறுவது முக்கியமானதாகும். இப்பகுதிக்கான ஒட்டுமொத்த செயலாற்றுகை உயர்வாக இருந்தது. எவ்வாறாயினும், சிறியளவிலானோர் நன்றாக விடையளித்திருக்கவில்லை.

**<u>பகுதி (b)</u>**

இங்கு **சுபுல் தளபாடக் கம்பனிக்காக** தொழிற்பாட்டு நிறுவனக் கட்டமைப்பொன்று கொண்டிருக்கின்ற நான்கு அனுகூலங்களையும் நான்கு பிரதிகூலங்களையும் குறிப்பிடுமாறு கேட்கப்பட்டது. இது மிகவும் நேரடியான கோட்பாட்டு ரீதியில் விடையளிக்கக்கூடிய வினாவாகும். கிட்டத்தட்ட பரீட்சார்த்திகளில் அரைவாசிப் பேர் இவ்வினாவுக்கு வெற்றிகரமாக விடையளித்திருந்தனர். வினாவின் இப்பகுதிக்கான ஒட்டுமொத்த செயலாற்றுகை திருப்திகரமாக இருந்தது.

**<u>பகுதி (c)</u>**

இங்கு, SWOT பகுப்பாய்வினைப் பயன்படுத்தி, சூழலினால் **சுபுல் தளபாடக் கம்பனியின்** தொழிற்பாட்டிற்கு ஏற்படக்கூடிய தாக்கங்களை மதிப்பிடுமாறு கோரப்பட்டது. தரப்பட்ட விவரணத்தை விளங்கிக்கொண்டு அதிலிருந்து தகவல்களைப் பிரித்தெடுப்பதன் மூலம் இந்த வினாவுக்கு விடையளிக்கக்கூடியதாக இருந்திருந்தபோதிலும், சில பரீட்சார்த்திகள் தரப்பட்ட விவரணத்தில் காணப்படாத SWOT காரணிகளை குறிப்பிட்டிருந்தனர். அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு வெற்றிகரமாக விடையளித்திருந்தனர். அத்துடன் சிறியளவிலான பரீட்சார்த்திகள் சரியான விடையினை அளிக்கத் தவறியிருந்தனர். எவ்வாறாயினும், வினாவின் இப்பகுதிக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமாக இருந்தது.

**<u>பகுதி (d)</u>**

இங்கு, போட்டரின் பெறுமதிச் சங்கிலி மாதிரியின் மூன்று முதன்மைச் செயற்பாடுகளைக் குறிப்பிடும்படி கேட்கப்பட்டது. வினாவின் இப்பகுதிக்கான செயலாற்றுகை மிகவும் குறைவாகும். எவ்வாறாயினும், ஒரு சில விடைகள் வெற்றிகரமாக அமைந்திருந்தன. சில பரீட்சார்த்திகள் போட்டரின் பெறுமதிச் சங்கிலி மாதிரியின் முதன்மைச் செயற்பாடுகளைக் குறிப்பிடுவதற்குப் பதிலாக இரண்டாம்நிலைச் செயற்பாடுகளைக் குறிப்பிட்டிருந்தனர். பரீட்சார்த்திகள் இவ்வாறு நிகழ்வதைத் தவிர்ப்பதற்காக சுய கற்றல் புத்தகத்தினை நன்கு கற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

**- - -**

## <u>பரீட்சார்த்திகளின் ஆற்றல் மட்டத்தை மேம்படுத்தும் பொருட்டு கருத்திற்கொள்ள வேண்டிய பொதுவான விடயங்கள்</u>:

1. பாடத்திட்டத்தை நன்றாகக் கற்கவும்.

2. வினாப்பத்திரத்தைப் பெற்றதும் அதிலுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசிக்கவும். (இந்நோக்கத்திற்காக கூடுதல் நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.)

3. பரீட்சார்த்திகள் வினாவைப் பல தடவைகள் கவனமாக வாசித்து, அதில் என்ன வினவப்பட்டுள்ளது என்பதை விளங்கிக்கொள்ளுதல் வேண்டும். நேரடியான விடை எதிர்பார்க்கப்படும் வேளையில், தேவையற்ற விபரிப்புகளையும் விபரங்களையும் எழுது வதைத் தவிர்த்துக்கொள்ளுதல் வேண்டும்.

4. பரீட்சை நேரத்தை வினைத்திறன்மிக்கதாகப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

5. விடைப் புத்தகத்தினை ஒப்படைப்பதற்கு முன், வினா இலக்கங்கள், உங்களது சுட்டிலக்கம் என்பன சரியாக எழுதப்பட்டுள்ளதா என்பதைப் பரீட்சிக்கவும்.

6. ‘‘செயல் வினைச்சொல் பட்டியல்’’ ஒன்று வினாப்பத்திரத்தின் இறுதியில் தரப்பட்டுள்ளது. நோக்கச் சோதனை வினாக்கள் தவிர்ந்த ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒவ்வொரு வினைச் சொல்லைக் கொண்டிருக்கிறது. பரீட்சார்த்திகள் அந்த அட்டவணையில் தரப்பட்டுள்ள வரைவிலக்கணத்தின் அடிப்படையில் விடைகள் எழுதப்படல் வேண்டும்.

7. கையெழுத்து தெளிவானதாக இருப்பதையும் விடைகளுக்கான வினா இலக்கங்கள் சரியாக எழுதப்பட்டுள்ளது என்பதையும் உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

8. சுய கற்றல் புத்தகம், கட்டுரைகள் மற்றும் சஞ்சிகைகள் போன்றவற்றை வாசிப்பது விரும்பத்தக்கது.

9. உங்கள் அறிவை மேம்படுத்திக் கொள்வதன் பொருட்டு கடந்தகால வினாப்பத்திரங் களுக்கு விடையளித்துப் பழகிக்கொள்ளுங்கள்.

10. நல்ல முன்னாயத்தத்துடனும் சித்தியடைகின்ற உறுதியானதொரு உறுதிப்பாட்டுடனும் பரீட்சைக்கு முகங்கொடுக்கவும

- * * * -